அடையாள இலக்கம்

B

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2019

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அ). பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| 1 சா ______ சதுரம் | 6. பச் ______ நிறம் |
| 2 ______ ங்காய் | 7. வாழைப்ப ______ம் |
| 3 வௌவா ______ | 8 பொங் ______ ல் |
| 4 மலர்க்கொத் ______ | 9 நகரம ______ டபம் |
| 5 தொ ______ டில் | 10 மின் ______ சிறி |

**(ஆ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.** (10 புள்ளிகள்)

1. கிளி - ______________________________
2. மாணவன் - ______________________________
3. பல் - ______________________________
4. பழம் - ______________________________
5. பெரியது - ______________________________

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.** (10 புள்ளிகள்)

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**

1. அம்மா ______________________ கடைக்குச் சென்றார்.

அ) அப்பாவுடன் ஆ) அப்பாவுக்கு

இ) அப்பாவை ஈ) அப்பாவிடமிருந்து

2. எங்கள் ______________________ கோழிகள் வளர்க்கிறார்கள்.

அ) பள்ளிக்கு ஆ) பள்ளியில்

இ) பள்ளியிடம் ஈ) பள்ளியோடு

3. திருவள்ளுவர் ____________________ இயற்றினார்.

அ) திருக்குறளுக்கு ஆ) திருக்குறளால்

இ) திருக்குறளை ஈ) திருக்குறளுடன்

4. உப்பு ____________________ எடுக்கப்படுகிறது .

அ) கடல் நீரில் ஆ) கடல் நீரினால்

இ) கடல் நீரிலிருந்து ஈ) கடல் நீரால்

5. மாலையில் நான் என் ____________________ சேர்ந்து விளையாடுவேன்.

அ) நண்பன் ஆ) நண்பனுக்கு

இ) நண்பனே ஈ) நண்பனுடன்

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. கிராமியக் கலைகளுள் **புரவி** ஆட்டம் ஆடுதல் மக்களை மகிழ்விக்கின்றது.

அ) பாம்பு ஆ) புலி

இ) ஆடு ஈ) குதிரை

2. பண்டைக்காலத்தில் குழந்தைகளுக்கு **அம்புலியைக்** காட்டி உணவை ஊட்டினார்கள்.

அ) நிலாவைக் ஆ) பகலவனைக்

இ) மேகத்தைக் ஈ) வானரங்களைக்

3. வித்தகன் **சித்திரம்** வரைவதில் வல்லவன்.

அ) வண்ணம் ஆ) ஓவியம்

இ) கற்பனையாக ஈ) மலைகளில்

4. கவிஞர்கள் இயற்கை **எழிலை** ரசித்துப் பாடினர்.

அ) வண்ணங்களை ஆ) அழகை

இ) காட்சிகளை ஈ) நானிலத்தை

5. **நண்பர்களிடம்** மனம் விட்டுப் பேசுதல் நல்லது.

அ) உறவினர்களிடம் ஆ) தோழர்களிடம்

இ) பெற்றோர்களிடம் ஈ) ஆசிரியரிடம்

**(உ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. நான் சென்ற வருடம் இலங்கைக்குச் **சென்றேன்.**

   நான் அடுத்த வருடம் இந்தியாவுக்குச் ______________________________.

2. மக்கள் மலர்தூவி மந்திரியை **வரவேற்றார்கள்.**

   நாளைய விழாவில் மந்திரியை மலர்தூவி ______________________________.

3. இன்று மழை விடாமல் **பெய்து கொண்டிருக்கிறது.**

   மழை நேற்றும் விடாமல் ___________________________.

4. கடற்கரையில் சிறுவர்கள் கட்டிய மணல்வீடு நீரில் **கரைந்தது.**

   இப்பொழுது தட்டில் இருக்கம் ஐஸ் கட்டிகள் ___________________________.

5. சென்ற வருடம் கணித பாடத்தில் குமரன் அதிக புள்ளிகள் **பெற்றான்.**

   அடுத்த வருடம் நான் கணித பாடத்தில் அதிக புள்ளிகள்

   __________________________.

(10 புள்ளிகள்) [ ]

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேரிந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையை பூர்த்தி செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| பை, | பால், | தேசிய, | புல், | வால், |
| தரையில், | இயல்பாக, | வாழும், | இறைச்சியை | |
| வலிமை | தின்னப், | மிருகக்காட்சிச் | குட்டையானவை | |

<u>கங்காரு</u>

கங்காருகளை அவுஸ்திரேலியாவில் அதிகமாகக் காணலாம். இது அவுஸ்திரேலியாவின் ______________________ (1) விலங்கு. இதில் 48 வகையான இனங்கள் உள்ளன. கங்காரு, குட்டிபோட்டுப் _________________ (2) கொடுக்கும் இனத்தைச் சேர்ந்தது. அதன் அடிவயிற்றில் ______________________(3) ஒன்று உண்டு. அந்தப்பை கங்காருவின் குட்டி வளரும் இடமாக அமைகிறது. கங்காரு _____________________(4) மேயும் போது அதன் குட்டியும் பையிலிருந்து கொண்டே தலையை வெளியில் நீட்டிப் புல்லைத் ______________(5) பழகுகிறது. அது வளர்ந்த பிறகு, பையை விட்டு வெளியே வந்து தாயுடன் நடமாடும்.

கங்காருவின் முன்னங்கால்கள் _____________________(6) யாகவும் பின்னங்கால்கள் நீண்டதாகவும் காணப்படும். அதன் பின்னங்கால்கள் வலிமை உடையவை. அது குதித்துக் குதித்துச் செல்லும். ஒரு தாண்டுதலில், அதனால் 13 மீட்டர் தூரம் கூடத் தாண்ட முடியும். நீண்ட கால்கள் காரணமாக அதனால் இயல்பாக நடக்க முடியாது. அது வாலையும் பின்னங்கால்களையும் ஊன்றிக் கொண்டு _______________________(7) உட்காரும். அவை கூட்டங் கூட்டமாக _______________________(8) இது தாவர உணவு மட்டும் உண்ணும்.


கங்காருவின் _______________________(9) பலர் உணவாகக் கொள்கின்றனர். சிலர் அதன் மயிர் அடர்ந்த தோலை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள். பல நாடுகளில் கங்காருகளை _______________________(10) சாலையில் காணலாம்.

(20 புள்ளிகள்)

(எ) கீழேயுள்ள படத்தொடரைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி தரப்பட்ட ஐந்து (5) சொற்களுக்கு பொருத்தமான வசனங்களை எழுதுக.

குறிப்பு: மிகக் குறைந்தது 7 சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.

## கடற்கரைக்குச் சென்றோம்.



1. கடற்கரை :

________________________________________

________________________________________

________________________________________

**2.** நீச்சல் :

**3.** பாயில் உட்கார்ந்து :

**4.** மணல்வீடு :

**5.** புத்தகம் :

(15 புள்ளிகள்)

**ஏ) குறைந்தது 25 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.**

(புள்ளிகள்: 15)

**<u>எனது பாடசாலை</u>**